Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆனி 26    [10-07-98]    சனிக்கிழமை    ஓசை 142

## விடுமுறைதினங்களில் காரியாலயம் திறப்பதற்கு மாகாணசபை தடை

ஞாயிற்றுக்கிழமை, போயாதினம் மற்றும் பொதுவிடுமுறை நாட்களில் அரச திணைக்களங்கள் எக்காரணம் கொண்டும் திறக்கப்படக்கூடாது. இந்நாட்களில் அரச ஊழியர்கள் மேலதிக நேரவேலை செய்யவும் அனுமதி இல்லை. அவசியவேலை ஏதாவது செய்யவேண்டியிருப்பின் வடகிழக்கு மாகாண அமைச்சின் செயலாளரின் பின்வேண்டும் அங்கீகாரத்தை எதிர்பார்த்து சனிக்கிழமைகளில் காரியாலயத்தைத் திறந்து வேலை செய்யலாம். செயலாளர் அனுமதி மறுக்கும் பட்சத்தில் சனிக்கிழமைகளிலும் காரியாலயம் மூடப்பட்டே இருக்க வேண்டும். மேலும் காரியாலய வேலை நாட்களில் காரியாலயங்கள் பி.ப. 5.15க்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் திறந்திருக்கக்கூடாது என்பதுடன் எவ் ஊழியரும் காரியாலயத்தில் இருக்கக் கூடாது. (4 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு உடன்பாட்டை மீறிவிட்டது; கைதிகள் மீண்டும் உண்ணாவிரதம்

## அடுத்த வாரம் ஆரம்பிக்க முடிவு

(கொழும்பு)

"வடபகுதிக்கு தேவையான எரிபொருள், மருந்துவகைகள் என்பன அனுப்பப்படும் என உறுதியளித்த அரசாங்கம் அவ் உறுதி மொழியிலிருந்து பின்வாங்கியதன் மூலம் தாம் விடுவிக்கப் படுவதைக் குழப்பியடித்து விட்டது. எனவே தாம் எதிர்வரும் 14ஆம் திகதி சாகும் வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 35 யுத்தக் கைதிகளும் தெரிவித்துள்ளனர்."

இவ்வாறு மனித நலன்களைப் பேணும் குழுவின் தலைவர் மாதம்பா ஆன இமியனுக்கு விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் தற்போது இருக்கும் சுனில் திஸநாயக்க எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பி. பி. ஸி. சிங்கள சேவையான சந்தேசிய தெரிவித்தது.

யுத்தக் கைதிகளை பார்வையிட்டுவிட்டு கொழும்பு திரும்பிய உறவினர் ஒருவர் மூலம் மாதம்பா ஆன இமியனுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு கொடுத்த உறுதிமொழியை அனாவசியமாக மீறியதனாலேயே தமது விடுதலை தடைப்பட்டதாக அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதி மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடையைத் தளர்த்தி இவர்களை விடுவிக்க அரசாங்கம் உறுதியளித்ததைத் தொடர்ந்து முன்னர் சாகும்வரை உண்ணாவிரதம் கைவிடப்பட்டமை தெரிந்ததே.

### மீண்டும் ரொனி

[கொழும்பு]

முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல் மீண்டும் கொழும்பு திரும்பலாம் என்றும் அவர் ஆளும் கட்சியுடன் இணையலாம் என்றும் ஊகங்கள் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நிலவுகிறது. இவர் அடுத்த இரு மாதங்களில் கொழும்பு வரலாம் எனக் கூறப்படுகிறது.

முன்னர் ரொனி டி மெல் கொழும்பு வந்ததும், எனினும் அவர் ஐ தே. கவில் இணையும் முயற்சி அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவினால் தடுக்கப்பட்டதும் தெரிந்ததே.

### "றுகுணு" கப்டன் மீது விசாரணை

(கொழும்பு)

'றுகுணு' கப்பல் கப்டன் சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகளால் விசாரிக்கப்படுவார் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தாம் கடற்படை அதிகாரிகளின் உத்தரவுகளின் பேரிலேயே கப்பலை பருத்தித்துறைக்கு கொண்டு சென்று பொருள்களை இறக்க முயன்றதாகவும், அப்போது இரண்

[3ஆம் பக்கம் பார்க்க]

### வடக்கு-கிழக்கு இணைப்பு

வவுனியா நகருக்கு

### பிரதான வீதியூடாக செல்ல பயணிகளுக்கு அனுமதி

வவுனியாநகர் செல்ல விரும்பிய பயணிகளைநேற்று ராணுவத்தினர் பிரதானவீதியூடாக செல்லஅனுமதித்தனர். கடந்த சில தினங்களாக பிரயாணிகள் சுற்றுப்பாதையூடாகவே செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை நேற்று தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்துவந்ததாகச் சொல்லப்படும் 20 பேரை லொறி ஒன்றில் ஏற்றிய இராணுவத்தினர் தாண்டிக்குளத்திலிருந்து பம்பைமடுவரை ஏற்றிச் சென்றுவிட்டு பின்னர் தாண்டிக்குளத்திலேயே இறக்கி விட்டுச் சென்றதாக வவுனியாவிலிருந்து வந்த பயணிகள் தெரிவித்தனர்.

### மட்டக்களப்பு நகரில் தீவிரசோதனை நடவடிக்கை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு நகரில் இராணுவமும் பொலிசும்இணைந்து கடும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். நகரின் எல்லையில் உள்ள சோதனைச்சாவடிகளில் முகமூடி நபர்களும் காணப்படுகின்றனர்.

மெட்டல் டிரக்டர் கருவி மூலம் படையினர் பொது மக்களைக் கடந்த இரு தினங்க

மையே பாதுகாப்புத் தீவிரத்திற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

### 'வாதுவ' புறப்பட்டது

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்துநின்ற 'வாதுவ' கப்பல் நேற்றுக் காலை பத்து மணியுடன் பொருள்களை இறக்கிமுடித்துவிட்டு நண்பகல் புறப்பட்டது.

இக்கப்பலில் யாழ். தபால் திணைக்களம் 43 தபால் பொதிகளை அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை யாழ். குடாநாட்டுக்கான ஒரு தொகுதி

(3ஆம் பக்கம் பார்க்க)

### சம்பள உயர்வு நிறுத்தம்; எதிர்த்து போராட்டம்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டிருந்த சம்பள உயர்வை எதிர்வரும் ஜனவரி மாதம் வரை நிறுத்திவைக்க அரசு எடுத்த முடிவை எதிர்த்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியின் தலைவர் அலவி மௌலானா நேற்று தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாகஎதிர்வரும் 21ஆம் திகதி மதிய உணவு வேளையின் போது ஒரு மணிநேரம் ஆர்ப்பாட்டம் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், பின்னர் சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், எதிர்ப்புப் பொதுக்கூட்டம் என்பன

[3ஆம் பக்கம் பார்க்க]

### காமினிக்கு அமைச்சர் பதவி ஐ. தே, கட்சி ஏற்பு?

(கொழும்பு)

ஆளும் ஐ தே. க. உடன் காமினி திஸநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இணைவதற்கு சாதகமான நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் கூறியதாக 'ஐலன்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கட்சிஇணைவின் நிபந்தனைகளில் ஒன்றான இரு மூத்த ஜ. ஐ. தே. மு. தலைவர்கள் பாதுகாப்பு அமைச்சராகவும் வர்த்தக வாணிபத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை ஆளும் கட்சி ஏற்றுள்ளதாக ஐலன்ட் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

ஐ. தே. கட்சியும் ஜ. ஐ.

[3ஆம் பக்கம் பார்க்க]

# தளபதி கிட்டுவின் மரணம்; இந்தியாவிற்குஎதிராகவழக்கு

அவர் ஐ.தே.க வில் இணையும் முயற்சி அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவினால் தடுக்கப்பட்டதும் தெரிந்ததே.

### "றுகுணு" கப்டன் மீது விசாரணை

(கொழும்பு)

'றுகுணு' கப்பல் கப்டன் சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகளால் விசாரிக்கப்படுவார் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தாம் கடற்படை அதிகாரிகளின் உத்தரவுகளின் பேரிலேயே கப்பலை பருத்தித்துறைக்கு கொண்டு சென்று பொருள்களை இறக்க முயன்றதாகவும், அப்போது இரண்

[3ஆம் பக்கம் பார்க்க]

க்கு விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் தற்போது இருக்கும் சுனில் திஸநாயக்க எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்

யிட்டுவிட்டு கொழும்பு திரும்பிய உறவினர் ஒருவர் மூலம் மாதம்பா ஆன இமியனுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்

அனாவசியமாக மீறியதனாலேயே தமது விடுதலை தடைப்பட்டதாக அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யளித்ததைத் தொடர்ந்து முன்னர் சாகும்வரை உண்ணாவிரதம் கைவிடப்பட்டமை தெரிந்ததே.

(கொழும்பு)

ஆளும் ஐ.தே.க. உடன் காமினி திஸநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இணைவதற்கு சாதகமான நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் கூறியதாக 'ஐலன்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கட்சிஇணைவின் நிபந்தனைகளில் ஒன்றான இரு மூத்த ஜ.ஐ.தே.மு. தலைவர்கள் பாதுகாப்பு அமைச்சராகவும் வர்த்தக வாணிபத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை ஆளும் கட்சி ஏற்றுள்ளதாக ஐலன்ட் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

ஐ.தே. கட்சியும் ஜ. ஐ.

[3ஆம் பக்கம் பார்க்க]

வவுனியா நகருக்கு

## பிரதான வீதியூடாக செல்ல பயணிகளுக்கு அனுமதி

வவுனியாநகர் செல்ல விரும்பிய பயணிகளைநேற்று ராணுவத்தினர் பிரதானவீதியூடாக செல்லஅனுமதித்தனர். கடந்த சில தினங்களாக பிரயாணிகள் சுற்றுப்பாதையூடாகவே செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை நேற்று தடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்துவந்ததாகச் சொல்லப்படும் 20 பேரை லொறி ஒன்றில் ஏற்றிய இராணுவத்தினர் தாண்டிக்குளத்திலிருந்து பம்பைமடுவரை ஏற்றிச் சென்றுவிட்டு பின்னர் தாண்டிக்குளத்திலேயே இறக்கி விட்டுச் சென்றதாக வவுனியாவிலிருந்து வந்த பயணிகள் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு நகரில் தீவிரசோதனை நடவடிக்கை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு நகரில் இராணுவமும் பொலிசும்இணைந்து கடும் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். நகரின் எல்லையில் உள்ள சோதனைச்சாவடிகளில் முகமூடி நபர்களும் காணப்படுகின்றனர்.

மெட்டல் டிரக்டர் கருவி மூலம் படையினர் பொது மக்களைக் கடந்த இரு தினங்களாக சோதனைசெய்து வருகின்றனர். வீடு வீடாகவும் சோதனைகள் தொடர்கின்றன. ஜனாதிபதி நடமாடும் சேவை இடம்பெறவுள்ளமையே பாதுகாப்புத் தீவிரத்திற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

வடக்கு-கிழக்கு இணைப்பு

# ஜனாதிபதி தேர்தலுக்கு முன் வாக்கெடுப்பு இல்லை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்து நடத்தப்பட ஆலோசிக்கப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பு ஜனாதிபதி தேர்தலுக்குமுன் இடம்பெறமாட்டாது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இது குறித்து ஆராய கடந்த செவ்வாய்க்கிழமை சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் மங்கள முனசிங்கா தலைமையில் கூடிய பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றரை மணிநேரம் ஆராய்ந்த பின்னர் கிழக்கில் பாதுகாப்பில்லை என சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து உறுதியான முடிவு எதுவும் எடுக்காமல் ஒத்திவைக்கப்பட்டது.

இக் கூட்டத்திற்கு விசேடமாக சிறிலங்கா கூட்டுப்படை தலைமைத்தளபதி ஹமில்டன் வனசிங்க, இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினா, கிழக்கு மாகாண பிராந்தியத் தளபதி ஜெனரல் லக்கி அல்கம பிரதி பொலிஸ்மா அதிபர் மித்திரா ஆரியசிங்க, பொலிஸ் அதிரடிப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் லயனல் கருணாசேனா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ். எஸ். ஜெயசூரிய ஆகியோர் அழைக்கப்பட்டு அவர்களிடமிருந்து கள நிலைமைகள் பற்றி அபிப்பிராயம் பெறப்பட்டது.

இவர்கள் யாவரும் தேர்தல் நடத்துவதற்கான பாதுகாப்பு

[4ஆம் பக்கம் பார்க்க]

## உள்ளூராட்சிதேர்தல்குறித்து தெரிவுக்குழு ஆராய்வு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு குறித்து ஆராயவென நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு கடந்த செவ்வாயன்று கூடியபோது கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆராய்ந்தது.

சிறிலங்கா பாதுகாப்பு அதிகாரிகளின் அபிப்பிராயங்களை அறிந்துகொண்ட தெரிவுக்குழு பின்னர் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவையும் அழைத்து அபிப்பிராயங்களைப் பெற்றுக் கொண்டது.

சர்வசன வாக்கெடுப்பை நடத்துவது குறித்து உறுதியான முடிவுஎதுவும் எடுக்காத நிலையில் உள்ளூராட்சி தேர்தலை நடத்தமுடியுமாஎன்பது குறித்து தெரிவுக்குழு ஆராய்ந்துள்ளது.

## தெரிவுக்குழு கூட்டத்திற்கு தமிழ்குழுக்கள் செல்லவில்லை

(கொழும்பு)

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற பாராளுமன்ற தெரிவுக்குழுக் கூட்டத்தில் தமிழ்க்குழுக்களோ, முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களோ, இ.தொ.கா. வினரோ கலந்து கொள்ளவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் ஐக்கியமுன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்ட போதிலும் தாம் அன்றைய கூட்டத்திற்கு பார்வையாளராக வந்துள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிச் செயலாளர் தர்மசிறி செனநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை தெரிவுக் குழு மீண்டும் ஜுலை 24ஆம்திகதி கூடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

களுத்துறை சிறையிலுள்ள

## வடபகுதி இளைஞர்கள் கட்டம் கட்டமாக விடுதலை?

(வடமராட்சி)

களுத்துறைச் சிறையில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டு வரும் வடபகுதி இளைஞர்கள் கட்டம் கட்டமாக விடுதலை செய்யப்பட இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடலிலும், சுற்றிவளைப்பின்போதும் கைதுசெய்யப்பட்டோரே இன்னமும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் இவர்கள் இம்மாதம் முதல் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் அறியமுடிகிறது.

இதேவேளை களுத்துறை சிறையில் இருக்கும் தமிழ் இளைஞர்கள் சிலரை கண்டி போகம்பறை சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது(யோ

வடக்கு கிழக்கு இணைப்பு

# நாடு முழுவதும் வாக்கெடுப்பு தேவை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்து இணைந்திருப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க கிழக்கு மாகாணத்தில் மாத்திரமின்றி நாடு முழுவதிலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று சிங்கள ஆரக்ஷா சங்விதான மற்றும் மகாபோதி சங்கம் ஆகியவற்றின் தலைவரான காமினி ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பிரிவினைவாதிகளுக்கு எதிராக நாட்டின் பிரிவினையைத் தடுப்பதற்கான யுத்தத்தில் தமது உயிர்களை தியாகம்செய்துள்ளனர்.

கிழக்கு மாகாணம் இந்த நாட்டின் ஒருபகுதி மட்டுமே. இது எதிர்காலத்திலும் அவ்வாறே தொடர்ந்திருக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# தளபதி கிட்டுவின் மரணம்; இந்தியாவிற்குஎதிராகவழக்கு

## வெளிநாட்டில் நிதி சேகரிப்பு

இவ்வாண்டு ஜனவரியில் சர்வதேச கடல் எல்லைக்குள் தனது கப்பல்களில் ஒன்றை இந்திய அரசுகைப்பற்றியதற்கு எதிராக போராட விடுதலைப் புலிகள் இயக்கம் சட்டப் பாதுகாப்பு நிதியொன்றை ஆரம்பித்துள்ளதாக கொழும்பு பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்திய உயர் நீதிமன்றில் புலிகளின் கப்பலை இந்திய அரசாங்கம் கைப்பற்றியது தொடர்பாக வழக்காட பிரபல அமெரிக்க பல்லைக்கழகங்களின் பெயர் கூறப்படாத மூன்று சர்வதேச சட்டவியல் பேராசிரியர்கள் வாஷிங்டனை சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் ஆகியோரை கொண்ட சட்டக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது எனவும்.

இந்திய நீதிமன்றில் விசாரிக்கப்படவுள்ள இந்த வழக்கு தொடர்பாக புலிகள் ஏற்கனவே 20,000 அமெரிக்க டொலர்களை செலவிட்டுள்ளதாகவும் இந்த வழக்கிற்கு

(3ஆம் பக்கம் பார்க்க)

# அரசு மீதான குற்றச்சாட்டு உடுகம்பொல வாபஸ்

(கொழும்பு)

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொல தாம் முன்னர் கூறியிருந்த குற்றச்சாட்டுகள் சரியானவை அல்ல என்று உறுதிமொழிப்பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார். இத் தகவலை நீதி, உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இந் நிலையில் உடுகம்பொலவிற்கு எதிரான வழக்கை சட்டமா அதிபர் வாபஸ் பெறுவதைத்தவிர வேறு வழியில்லை. உடுகம்பொல முன்பு கூறிய குற்றச்சாட்டுகளை அரசு அலட்சியம் செய்யவில்லை. ஆனால் தனது குற்றச்சாட்டுகளை உடுகம்பொல வாபஸ் பெறும்போது அரசு எதுவுமே செய்யமுடியாது என்றும் அமைச்சர் ஹமீட் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக ஜனாதிபதி பிரேமதாஸா தனது அரசியல் எதிரிகளை படுகொலை செய்ய கறுப்புப் பூனைப்படை என்ற இரகசியப்படையைப் பயன்படுத்தியதாக உடுகம்பொல கூறியிருந்தமை தெரிந்ததே

### றொனியிடம் பகிரங்க மன்னிப்பு

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டிமெல்லிடம் நிபந்தனையற்ற விதத்தில் மன்னிப்புக் கோருவதாக தினகரன் வாரமஞ்சரி முன்பக்கச் செய்தி வெளியிட்டுள்ளது

1991 ஆகஸ்டு 18ஆம் திகதி வாரமஞ்சரி வெளியீட்டில் றொனிடிமெல் வங்கி ரகசியம் அம்பலம் என்ற தலைப்பின் கீழ் வெளியான செய்தி தொடர்பாகவே இந்தப் பகிரங்க மன்னிப்புக் கோரப்பட்டுள்ளது.

## உடுகம்பொல குறித்து மனிதஉரிமைக்குழுஆராய்வு

(கொழும்பு)

மனித உரிமைகள் வழக்கறிஞர் நேற்றுக் கொழும்பில் கூடி பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல பற்றி ஆலோசித்தனர். உடுகம்பொல ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவுடன் ஒரு இணக்கத்துக்கு வந்துள்ளதை அடுத்து உடுகம்பொல புரிந்த கொலைகள் சம்பந்தமாக என்ன நடவடிக்கை மேற் கொள்ளலாம் என மனித உரிமைகள் வழக்கறிஞர் ஆலோசித்ததாகத் தெரிய வருகின்றது.

சுமார் 1000 இளைஞர்கள் உடுகம்பொலவால் கொலை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## வரி விளம்பரம்

**கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?**

மேற் குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடப் திருத்தக் கொடுத்து பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச்அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6937)

**வியாபார கட்கு**

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள், லேஸ், நூல் வகைகள், எவர் சில்வர் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருள்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள -ஜெயா அழகுசாதன மாளிகை, 177-A, மின்சார வீதி, யாழ்ப்பாணம். (சி/6968)

**தேவை**

யாழ் நகர், நகரை அண்மித்த பகுதிக்குள் அலுவலக தேவைக்கு வீடு அல்லது கடைபோன்ற இடம் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சோ பிரபாசரன், நியூ சென்றல் பேக்கரி, 69, மவுணகார்மல் வீதி யாழ்ப்பாணம் [5302]


**திருமண சேவை**

பொருத்தமான மணமகள்/மணமகன் எம்மிடம் உண்டு தொடர்பு: மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [5314]

**உதவிப் பணக் கொடுப்பனவு**

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள தபாற்கந்தோர், உபதபாற்கந்தோர்கள் மூலம் புற்றுநோய், காசநோய், தொழுநோய் போன்றவற்றுக்கான உதவிப்பணக் கொடுப்பனவுகள் யாவும்வழங்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கையினை தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார். இவ் உதவிப்பணம் பெறும் வலிவடக்கு பிரதேசத்தை சார்ந்தவர்கள் தங்களுக்கு இணைக்கப்பட்ட தபாற கந்தோர் மற்றும் உபதபாற் கந்தோர்களில் தொடர்பு கொள்ளும்படி தெல்லிப்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 19 | 10 |
| — | — |
| 08 | 07 |
| — | — |
| 1970 | 1990 |

கடற்கரும்புலி

### கப்டன் வினோத்

(வேலுப்பிள்ளை திலகராஜா)

உன் தியாகம்
மண்ணை மகிமைப்படுத்துகிறது
உன் ஞாபகம்
காலத்தால் அழியாதது!

காட்டுவளவு, வல்வெட்டித்துறை. — குடும்பத்தினர் (5257)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### 2ஆம் லெப். இந்திரன்

(மயில்வாகனம் லயன் சந்திரன்)

**தாயின் மடியில்:** 06 08-1975

**தாயக மண்ணில்:** 10-07-1992

புகைப்படச் சிட்டையைத் தந்து சென்றாயே
- நாளை வருவதாக
அன்றே உன் உயிரை பறித்தார்கள் அரக்கர்கள்
உன் வரவை எதிர்பார்த்து இருந்தோம்
உன் உடல்தான் வந்தது அன்று
ஓராண்டு சென்றாலும் உன்நினைவால் வாடுகின்றோம்.

இவருடன் வீரச்சாவெய்திய மற்றைய வேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்.

முள்ளி வீதி, அம்மா, சகோதரர்கள். (5320)

## நினைவு கூருகின்றோம் ... 1993-07-10

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் வல்வெட்டித்துறை பொலிகண்டிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**வேந்தன்/கிருபா** தில்லையம்பலம் கிருபைராசா-சிறிமுருகன் குடியேற்றம், மீனாட்சியம்மன் கோயிலடி-வல்வெட்டித்துறை)

மட்டு-பழுகாமம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

திருமலை - கும்புறுப்பிட்டி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடடுக்கொல்லப்பட்ட 7 வயதுச்சிறுவன் உட்பட ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த 7 தமிழர்கள்.

கரவெட்டி-துன்னாலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு மட்டு-கிரான் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**சுனில்/சுரேஸ்** (பொன்னுத்துரைபுஸ்பன்-மாமங்கம்-மட்டு

1989ஆம் ஆண்டு பருத்தித்துறை-வியாபாரிமூலைப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 06 வயதுச் சிறுவன் உட்பட 06 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு தமிழீழக்கடற்பரப்பில் (வல்வெட்டித்துறை) சிறிலங்காக் கடற்படைக் கப்பல்மீது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய கடற்கரும்புலிகள்,

கடற்கரும்புலி:
**கப்டன் கொலின்ஸ்** (பர்னாந்து சில்வெஸ்டர்-நறுவிலிக்குளம்-மன்னார்)

கடற்கரும்புலி:
**மேஜர் காந்தரூபன்** (யோகராசா கோணேஸ்வரன்-ரேவடிகுச்சம் ஒழுங்கை, -வல்வெட்டித்துறை)

கடற்கரும்புலி:
**கப்டன் வினோத்** (வேலுப்பிள்ளை திலகராசா-திலகராசா வீதி, காட்டுவளவு -வல்வெட்டித்துறை)

தவறுதலாக மிதி வெடியில் சிக்கி வீரச்சாவெய்திய,

**தேவன்** (ஸ்ரீபன் ரெலர்-ஆலிம்நகர்,மூதூர்-திருமலை)

முல்லைத்தீவு-கொக்காவில் பகுதியில் சிறிலங்கா இராணுவமுகாம மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**மருது** (இராஜேந்திரம் சாந்தகுமார்-7-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு-முல்லைத்தீவு)

யாழ்-மயிலிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**சீனிவாசன்** (செல்வராசா உமையாளன்-ஐயனார்கோயிலடி, சுன்னாகம்-யாழ்)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவததினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் சொல்லப்பட்ட குழந்தை உட்பட 02 தமிழர்கள். சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டும், எரித்தும் கொல்லப்பட்ட சிறுமி, பெண் ஆகிய 02 தமிழர்கள். கல்முனைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மற்றும் ஜிகாத் குழுவினரால் வெட்டிக்கொல்லப்பட்ட 31 தமிழர்கள்.

முல்லைத்தீவு - வற்றாப்பளைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட இளம் பெண்.

1991ஆம் ஆண்டு அம்பாறை - றவேக்குளம் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**ரூபன்** (— — —)

வவுனியா – செட்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய-

**2 ம் லெப். ரஜனி** (நாராயணன் மகாலிங்கம் – கொக்கட்டிச்சோலை - மட்டு)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆகாய, கடல்,வெளி நடவடிக்கையில் சுற்றுலா விடுதி முகாம் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கொடிகாமம்

**வர்த்தக முகாமையாளர் பதவி - சம்பள அளவுத்திட்டம் – 106-8**

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பிப்போர் 26. 07. 1993ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப. நோ கூ. சங்கம், கொடிகாமம் என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப கடிதத்தின் இடப்பக்க மேல் மூலையில் ''வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்'' என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வர்த்தக முகாமையாளர் 106 - 8**

[1] சம்பளம்: $\frac{1005 - 1705}{40 \times 5 - 50 \times 10}$

அத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டபடிகளும் வழங்கப்படும்.

[2] வயது: 26. 07. 1993ஆம் திகதி 23 வயதுக்கு குறையாதவராயும் 40 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும்.

(பணியாளருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

[3] தகைமை:

(அ) 9ஆவது சம்பளத்தில் 3 வருட அனுபவமுள்ள முகாமைத்துவ பதவி வகித்தவர். அல்லது இச் சம்பளத் திட்டத்தில் மேற்பார்வைப் பதவி வகித்தவர். அல்லது 10ஆவது சம்பளத் திட்டத்தில் 6 வருட அனுபவம் பெற்ற மேல் குறிப்பிட்ட முகாமை, மேற்பார்வைப் பதவிகள் வகித்தவர்.

அல்லது

(ஆ) சர்வகலாசாலையில் வர்த்தகம் / வியாபார நிர்வாகம் / பொருளாதாரத்தில் விசேட பட்டம் பெற்ற பட்டதாரி அல்லது அங்கீகரிக்கப்பட்ட இதை ஒத்த மன்றத்தில் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(இ) கூ. ப. பயிற்சி உயர்தரம் / க. பொ. த. பத்திரம் [உயர்தரம்] 3 பாடத்திற்கு குறையாத சித்தியும், சந்தைப்படுத்தல் / விநியோகம் பங்கீடு / இறக்குமதி ஏற்றுமதி ஆகியதுறையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் மேற்பார்வை பதவியில் நான்கு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

தென்மராட்சி கி. ப. நோ. கூ. சங்கம் தலைவர்.
கொடிகாமம்,
07. 07. 93. [சி/6983]

**லெப். சியால்/சியாஸ்** (கிங்ஸ்லி யோசப் இராசரத்தினம் 25. வேம்படி வீதி,யாழ்ப்பாணம்)

**லெப். நிலாம்ஸ்** (கனகரத்தினம் லதீஸ்வரன் - சங்கத்தானை, சாவகச்சேரி - யாழ்.)

**2 ம் லெப். வசிட்டன்** (அண்ணாமலை சசிக்குமார் -

தொடர்பு: மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [5314]

### உதவிப் பணக் கொடுப்பனவு

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள தபாற்கந்தோர், உபதபாற் கந்தோர்கள் மூலம் புற்றுநோய், காசநோய், தொழுநோய் போன்றவற்றுக்கான உதவிப்பணக் கொடுப்பனவுகள் யாவும்வழங்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கையினை தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் மேற்கொண்டுள்ளார். இவ் உதவிப்பணம் பெறும் வலிவடக்கு பிரதேசத்தை சார்ந்தவர்கள் தங்களுக்கு இணைக்கப்பட்ட தபாற கந்தோர் மற்றும் உப தபாற்கந்தோர்களில் தொடர்பு கொள்ளும்படி தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.



## 2ஆம் லெப். இந்திரன்

(மயில்வாகனம் லயன் சந்திரன்)

தாயின் மடியில்: 06 08-1975

தாயக மண்ணில்: 10-07-1992


புகைப்படச் சிட்டையைத் தந்து சென்றாயே
- நாளை வருவதாக
அன்றே உன் உயிரை பறித்தார்கள் அரக்கர்கள்
உன் வரவை எதிர்பார்த்து இருந்தோம்
உன் உடல்தான் வந்தது அன்று
ஓராண்டு சென்றாலும் உன்நினைவால் வாடுகின்றோம்.

இவருடன் வீரச்சாவெய்திய மற்றைய வேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள்.

முள்ளி வீதி,
அரியாலை.

அம்மா, சகோதரர்கள்.
(5320)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஆனையிறவு யுத்தத்தில் வீரச்சாவு அடைந்த

**லெப். லக்ஷ்மன்**
[சார்ள்ஸ் அன்ரனி சிறப்புபபடைப்பிரிவு]
(தவானந்தவேல் குகதீஸ்வரன்)

**லெப். சித்திக்**
(தவானந்தவேல் விக்கினேஸ்வரன்)

| | | |
|---|---|---|
| 1975. 08. 15 | < முளையாக: > | 1973. 10. 20 |
| 1991. 07. 11 | < விதையாக: > | 1991. 07. 10 |

அண்ணனவர் திரமுடன் எடுத்துரைத்த
தீந்தமிழ் அன்னையவள் நிலைபற்றி
வேகமுடன் ஏற்றனர் புலி வேதத்தை
வேங்கையர் சேனையில் முறையாகப் பயின்று
ஆனையிறவில் அண்ணனின் வழி நடத்தலில்
உடல் பொருள் ஆவி அத்தனையும் அர்ப்பணித்தனர்
இன்றுவரை இன்னுயிரை உவந்தளித்த மாவீரர்களுக்கு
உங்கள் வழி செலவோம் என்று உறுதி கூறுகின்றோம்.

- குடும்பத்தினர்

திகிரி வளவு,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

[5317]

லடி, சுன்னாகம்-யாழ்)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் சொல்லப்பட்ட குழந்தை உட்பட 02 தமிழர்கள். சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டும், எரித்தும் கொல்லப்பட்ட சிறுமி, பெண் ஆகிய 02 தமிழர்கள். கல்முனைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மற்றும் ஜிகாத் குழுவினரால் வெட்டிக்கொல்லப்பட்ட 31 தமிழர்கள்.

முல்லைத்தீவு - வற்றாப்பளைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட இளம் பெண்.

1991ஆம் ஆண்டு அம்பாறை - றவேக்குளம் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**றூபன்** (— — —)

வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய-

**2 ம் லெப். ரஜனி** (நாராயணன் மகாலிங்கம் - கொக்கட்டிச்சோலை - மட்டு)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆகாய, கடல்,வெளி நடவடிக்கையில் சுற்றுலா விடுதி முகாம் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**லெப். புண்ணியமூர்த்தி** (சின்னத்தம்பி சிவகுமார் -இன்ஸ்பெக்டர் ஏற்றம், பொத்துவில்03, அம்பாறை)

**காந்தன்** (கணபதிப்பிள்ளை பத்மநாதன் - ஐயங்கேணி, ஏறவூர் - மட்டு)

**தீபன்** (சாமித்தம்பி தங்கேஸ்வரன் - கள்ளிததீவு, திருக்கோயில் - அம்பாறை)

**விக்கி** (தங்கராஜா விக்கினேஸ்வரன் - மல்வத்தை - அம்பாறை)

**குமார்** (இலட்சுமணன் குமார் - கித்துள், கரடியனாறு- மட்டு)

**லெப். வ கினி** (தேவராணி கந்தசாமி - சுங்கன்கேணி, வாழைச்சேனை - மட்டு)

**சகாரா** (மகேஸ்வரி பொன்னுச்சாமி - பிரதானவீதி, கிரான் - மட்டு)

**கப்டன் உதயகுமார்** (ஆறுமுகம் தனபாலசிங்கம் - 3-ம் கட்டை, சோலையடி. திருமலை)

**2-ம் லெப். அமராவதி** [நகுலேஸ்வரி பாலசிங்கம் - 2-ம் வட்டாரம், இரணைக்கேணி, குச்சவெளி - திருமலை]

**றிசானா** [ஈஸ்வரி தங்கராசா - விவி ஒழுங்கை, ஆலங்கேணி கிண்ணியா - திருமலை]

**2 ம் லெப் கலிஸ்ரா** [செந்தமிழ்செல்வி சதாசிவம்- பழம்பாசி, நெடுங்கேணி - மணலாறு]

**செந்தில்** [பாலசுந்தரம் செல்வகுமார் - நாவலர்பண்ணை, மருதோடை, நெடுங்கேணி - மணலாறு]

**விதுபாலா** [ஜெயராணி தளையசிங்கம் - தண்டுவான் மாமடுச்சந்தி, நெடுங்கேணி - மணலாறு]

**கப்டன் பரன்** [சிங்காரம் அன்பழகன் - வன்னிவிழாங்குளம், மாங்குளம் - முல்லைததீவு]

**லோ** [சின்னத்தம்பி அமிர்தலிங்கம் - ஒட்டிசுட்டான், முல்லைச்தீவு]

**கப்டன் மதிவண்ணன்** [சாமுவேல் புஸ்பராஜ்- கிறீஸ்தவகுளம், செட்டிக்குளம் -வவுனியா]

**லெப். காந்தன்/கண்ணன்** (சிவசுப்பிரமணியம்சிவகணேஷ் நெளுக்குளம்-வவுனியா)

**லெப் கௌசலன்** (சத்திவேல் நாகேஸ்வரன் செட்டிப்புலவு வவுனியா)

**ஜமுனா** (சீதாலட்சுமி தியாகராசா - சாஸ்திரிகூழாங்குளம் - வவுனியா)

**லெப். பிந்துரன்** (அன்ரனி ஜெராட் (லோகு) - 7-ம் வட்டாரம், பேசாலை - மன்னார்)

**2-ம் லெப். சுதன்** (செபமாலை ஜேசுதாஸ் - பாலையடி, புதுக்குளம், வட்டக்கண்டல் - மன்னார்)

**ரூபிகா** (ஹெலன் டயானி அலோசியஸ் - செபஸ்தியார் கோயிலடி - மன்னார்)

**லோகா** [கோமதி சக்திவேல் - இருதயநகர் — கிளிநொச்சி]

**லெப் சித்திக்** [தவானந்தவேல் விக்கினேஸ்வரன் - தெணியம்பை - வல்வெட்டித்துறை]

மன்றத்தில் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(இ) கூ. ப. பயிற்சி உயர்தரம் / க. பொ. த. பத்திரம் [உயர்தரம்] 3 பாடத்திற்கு குறையாத சித்தியும், சந்தைப்படுத்தல் / விநியோகம் பங்கீடு / இறக்குமதி ஏற்றுமதி ஆகியதுறையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் மேற்பார்வை பதவியில் நான்கு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

தென்மராட்சி கி. ப. நோ. கூ. சங்கம் தலைவர்.
கொடிகாமம்,
07. 07. 93.

[சி/6983]

**லெப். சியால்/சியாஸ்** (கிங்ஸ்லி யோசப் இராசரத்தினம் 25, வேம்படி வீதி,யாழ்ப்பாணம்)

**லெப். நிலாம்ஸ்** (கனகரத்தினம் லதீஸ்வரன் - சங்கத்தானை, சாவகச்சேரி - யாழ்.)

**2 ம் லெப். வசிட்டன்** (அண்ணாமலை சசிக்குமார் - செல்லமுத்து வீதி, நவாலி, மானிப்பாய் - யாழ்.)

**2-ம் லெப் தபேசா** (மஞ்சுளா அப்பையா - கொண்டலடி ஒழுங்கை, நல்லூர் - யாழ் )

**பகீர்தா** (சிவநந்தினி சின்னத்தம்பி - அண்ணமார் கோயிலடி, ஏழாலை - யாழ் )

**திலகன்** (திருச்செல்வம் கிங்ஸ்லி ஆம்ஸ்ரோங் கஜேந்திரன் - 13, புதியகுடியிருப்பு, பாஷையூர் - யாழ்.)

**நியூட்டன்** (குமாரசாமி சிவகுமார் - நாவற்குழி. கைதடி - யாழ்.)

**மாயவன்** (சங்கரப்பிள்ளை கனகசிங்கம் - பலாலி தெற்கு கொடிகாமம் - யாழ்.)

**சத்தியன்** (பூர்வானந்தசர்மா பாலரூபசர்மா - துன்னாலை வடக்கு, கரவெட்டி - யாழ்.)

**ரமேஸ்** (தம்பித்துரை முத்துக்குமாரு - சிறுவிளான், இளவாலை - யாழ்.)

1992ஆம் ஆண்டு இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய - முன்னாள் தீவகத் தளபதியும், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியுமான -

**மேஜர் கிண்ணி/அசோகன்** (கந்தசாமித்துரை ரவீந்திரன் - வேம்படி - வல்வெட்டித்துறை)

யாழ் - அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவக் காவலரண் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். நாவலன்** (முனியாண்டி குமார் - சிவபுரம், மல்லாவி, மாங்குளம் - முல்லைத்தீவு)

**கப்டன் லுக்மன்/செங்கதிர்/செந்தில்** (வலிதியான் சின்னத்தம்பி - மணற்காடு, குடத்தனை - யாழ்.)

**லெப். சுடரொளி/தீபன்** (குழந்தைவடிவேல் ரமேஸ் - 2-ம் குறுக்குத்தெரு, பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை - பருத்தித்துறை)

**2-ம் லெப். இந்திரன்** (மயில்வாகனம் சந்திரன் - முள்ளி வீதி, அரியாலை - யாழ்.)

யாழ் - பலாலியில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். அருள்நம்பி** (மரியதாஸ் ஜோண்சன் - 21/4, புதுவீதி, கொய்யாத்தோட்டம் - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6984)

## சிந்தனைக்கு

இக்காலத்தை விட முற்காலம் சிறந்தது என்ற மயக்கம் எக்காலத்திலும் இருந்து வந்துள்ளது.

— ஹேரஸ் க்ரீலி

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05


# அமைப்பு மாறினாலும் ஆட்சியாளர் மாறவில்லை

இனப்பிரச்சினைத்தீர்விற்கு சர்வகட்சிமாநாடு, தெரிவுக்குழு என்பன அமைத்த நிலைமாறி தற்பொழுது நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பை மாற்றுவதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அமைக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது. அதாவது தான் தோன்றித்தனமாக தான் கொண்டுவந்த ஓர் அரசியல் யாப்பை நீக்கிவிட ஐக்கிய தேசியக் கட்சி சகல கட்சிகளினதும் ஒத்துழைப்பை நாடவுள்ளது.

ஐ. தே. கவின் இவ் முயற்சிக்கு ஜனநாயகத்தின் மீதான பற்றோ, அன்றி மற்றவர் கருத்து அறியும் ஆவலோ காரணமல்ல. அரசியலமைப்பில் மாற்றம் ஏதாவது செய்யப்பட வேண்டுமானால் அதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிட்ட வேண்டும் என அதே அரசியல் யாப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமையே காரணமாகும்.

ஆனால், இவ் விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் தமது வழமையான பாணியில் எதிர்ப்பைத் தெரிவிக்கும் என எண்ணவாய்ப்பில்லை. கடந்த காலத்தில் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு பாராளுமன்ற ஆட்சிமுறை அமுல்படுத்தப்பட வேண்டும் எனக் கோரிவந்தன. மாகாண சபைத் தேர்தலிலும் இவ்விவகாரம் முக்கிய பிரசாரமாக இருந்தது. இந்நிலையில் இவ்விவகாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு தடைகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், இதைத் தொடர்ந்து கருத்துக் கணிப்பு இடம் பெறினும் அது வெற்றி பெறும் என்றே துணிந்து கூறலாம்.

ஆனால், இவ் அரசியல் யாப்பு மாற்றத்தால், இனப்பிரச்சினை குறித்து முன்னேற்றகரமான நிலைமை ஏதாகிலும் ஏற்படுவதற்கான வாய்ப்பு உண்டா என்றால் இல்லை என்றே கூறவேண்டும். மாறாக சிலவேளை இனப்பிரச்சினை மேலும் சிக்கல் அடைவதற்கான வாய்ப்புக்களே அதிகமானதாகவுள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை சிறுபான்மையினருக்கு ஓரளவு சாதக

# அன்று விமர்சித்தவர்கள் இன்று துதிபாடுகின்றனர்

## திருமதிஹேமா குறித்து அமைச்சர் ரணசிங்க

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா உயிருடன் இருக்கும் வரையில், நீச்சலடிப்பதற்கும் டென்னிஸ் விளையாடுவதற்கும் திருமதி ஹேமா போய் வருகிறார் என்று குறைசொன்னவர்கள் தான் இப்போது திருமதி ஹேமாவை அரசியலுக்குள் இழுத்துவிட முனைகிறார்கள் என்று தகவல் துறை அமைச்சர் ஏ. ஜே, ரணசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் ஐலன்ட் பத்திரிகையின் செய்தியாளருடன் பேசிய அமைச்சர் மேலும் கூறுகையில், பிரேமதாசா உயிருடன் இருக்கும் வரையில் அவரிடம் பாராட்டு பெறாமல் அவருக்கு பாதிப்பை ஏற்படுத்திய சக்திகள் இப்போது திருமதிஹேமாவை அரசியலுக்குள் தீவிரமாககொண்டு வருவதாகவும், பிரேமதாசா மீது அரசியல் குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்ட போது மதில் மேற் பூனைகளாக இருந்த இவர்கள் இப்போது பிரேமதாசாவின் தீவிர ஆதரவாளர்கள் போல மாறியிருப்பது விந்தைதான் எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். பிரேமதாசாவின் தகனக் கிரிகைகளுக்கு, இரு தினங்களுக்கு முன்பிருந்தே திருமதி ஹேமாவை அரசியலுக்குள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், எனினும் தான் அதற்கு ஊக்கமளிககவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை பிரேமதாசாவின் மகன் சயித் பிரேமதாசா அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆர்வம்கொண்டிருப்பதாகவும், ஐ. தே. கவினுள் இருக்கும் சக்தி மிக்க ஒரு சாரார் திருமதி ஹேமா பிரேமதாசாவையும், மகன் சயித் பிரேமதாசாவையும் ஆதரித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

## அனுமதியின்றி வியாபாரம் பலர் கைது

(யாழ்ப்பாணம்)

அனுமதிப் பத்திரமின்றி வியாபாரம் நடாத்திய பலர் தமிழீழ காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சில தினங்களாக வியாபார நிலையங்களில் காவல் துறையினர் மேற் கொண்டு வரும் திடீர் சோதனையின் போதே இத்தகையோர் கண்டு பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். சிறுவாணிபம் செய்பவர்கள் சிலரும் மேற்படி சோதனையின் போது அனுமதிப் பத்திரமின்றி வாணிபம் நடாத்தி வந்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது.

[22]

## குறுகிய கால விவசாய பயிற்சிகள்

விவசாயம் பயில ஆர்வமுள்ள க. பொ. த. (சா/த) வரை படித்தவர்களுக்கு குறுகிய கால விவசாய பயிற்சிகளை தகுதியான நிறுவனங்களுடன் இணைந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கழகம் வழங்கி வருகின்றது.

இப் பயிற்சிகளில் பொதுவான விவசாயம், மரக்கறிச் செய்கை, சிறுதானியச் செய்கை, பழமரச் செய்கை ஆகியவற்றில் போதனையுடன்செயன்முறை பயிற்சிகளும் வழங்கப்படுகின்றது.

தொடர்ந்து வழங்கப்பட்டு வரும் இப் பயிற்சி நெறிகளின் அடுத்த அமர்வு எதிர் வரும் 12-07-93 — 23-07-93 வரையான காலத்தில் நடாத்தப்பட உள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் த.பொ. மே. கழக மாவட்ட கோட்ட இணைப்பாளருடன் தொடர்பு கொண்டு பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

மேலும் பயிற்சியாளருக்கு நாளாந்த ஊக்குவிப்பாக சிறு தொகைப் பணமும், அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படுமெனவும், பயிற்சி பெற்றவர்களில் தகுதியானவர்களுக்கு கழக வேலைத் திட்டங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதில் முன்னுரிமை அளிக்கப்படுமெனவும, பொருண்மிய மேம்பாட்டு கழக செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## கட்சி மாறலை ஆதரிக்கும் திருத்தத்திற்கு பிரேரணை

[கொழும்பு]

பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதைத் தடுக்கும் வகையில் இருக்கும் அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு திருத்தம் கொண்டுவரும் பிரேரணைக்கு களுத்துறை மாவட்ட சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்னான்டோ முன் அறிவித்தல் கொடுத்துள்ளார்.

இப் பிரேரணை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு இருப்பதை தொடர்ந்து இந்த மாதத்தினுள் [illegible] தத்திற்கு எடுத்துக் கொள்ளப் படலாம் என்று நம்பப்படுகிறது.

இப் பிரேரணை தொடர்பாக கருத்து வெளியிட்ட டாக்டர் நெவில் பெர்னாண்டோ மேலும் கூறுகையில்; பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். கட்சித் தலைவரின் அநாவசிய கோரிக்கைகளுக்கு தலை ஆட்டும் பொம்மையாக மட்டும் இருக்கக்கூடாது எனவும் தெரிவித்[illegible]

## இடமாற்றம் ரத்து

யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அவர்களினால் ஒப்பமிடப்பட்டு கெற்பலியில் இயங்கி வரும் புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயத்துக்கு 01-07-93 தொடக்கம் செயற்படும்படியாக இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களில் பதினைந்து ஆசிரியர்களின் இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. (17)

## இரவுநேர மீட்டல் வகுப்புகள்

(தொல்புரம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தொல்புரம் பாபு கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் பாடசாலை மாணவ, மாணவியற்கான இரவு நேர மீட்டல் வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி மீட்டல் வகுப்புக்கள் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் பெற்றோமாக்ஸ் லாம்பு வெளிச்ச வசதியுடன் சுமார் நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது கல்வியை இரவு வேளை சுயமாகக் கற்று பயனடைந்து வருகின்றனர்.

## "லொக்பஸ்டர்" றைபிளுடன் முஸ்லிம் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கிழக்கு ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட ''லொக்பஸ்டர்'' ரக தன்னியக்க றைபிள் மற்றும் ஒரு எஸ். எம். ஜி ரகத் துப்பாக்கி அவற்றிற்கான ரவைகள் என்பவற்றுடன் சம்மாந்துறை பகுதியில் ஐந்து முஸ்லிம் வாலிபர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து 1992 அக்டோபரில் நடைபெற்ற நிந்தவூர் மக்கள் வங்கிக் கொள்ளையின் போது காணாமற்போன டைப்ரைட்டர்கள், நகைகள், போன்றவற்றையும்பொலிசார் மீட்டுள்ளனர்.

இவர்களுக்கும் முஸ்லிம் அடிப்படைவாத அமைப்பான ஜிகாத்திற்கும் தொடர்புஇருக்கலாம் எனவும் பொலிசார் கருதுகின்றனர்.

## கரும்புலிகள் நினைவுக்கூட்டம்

கரும்புலிகள்தினத்தை நினைவுகூரும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக முதன்மைச் செயலகத்தில் கடந்த 5-ம் திகதி நினைவுக்கூட்டம் நடாத்தப்பட்டது.

இந்த நினைவுக்கூட்டத்தை மேஜர் பிரதாப் செட்டியின் தாயார் ஈகைச் சுடரேற்றி ஆரம்பித்து வைத்தார். இதில் யோகரட்ணம் யோகி, யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர்கணேஸ் மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன் தியாகம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

## மேலதிகாரி மீது துப்பாக்கிப் பிரயோகம்

### மன்னாரில் சம்பவம்

[மன்னார்]

மன்னாரில் இராணுவ பதுங்கு குழியொன்றில் கடமையில் இருக்கத் தவறிய இராணுவச் சிப்பாய் ஒருவர் பதுங்கு குழியைச் சோதனை செய்வதற்கு வந்த லான்ஸ் கோப்ரல் விஜேசூரிய என்பவரைச் சுட்டுக் கொலை செய்தார்.

கடந்தவியாழக்கிழமைகுறிப்பிட்ட பதுங்குகுழியில் காவல் கடமைக்கு அனுப்பப்பட்ட இருவரில் ஒருவரை காணாததால் லான்ஸ் கோப்ரல் அவரைப் பற்றிய விபரங்களை எடுத்துக் கொண்டு சென்றாராம். கடமையில் இருக்கத் தவறிய சிப்பாய் இதனை அறிந்து லான்ஸ் கோப்ரலைப் பின் தொடர்ந்து சென்று துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்தார்.

## உரவகை எருத்துவர விவசாய பகுதி முயற்சி

(யாழ்ப்பாணம்)

தமக்கு போதிய அளவு கடன் வசதி இல்லாமையே காலபோக பயிர்ச் செய்கைக்கு தேவையான உள்ளீடுகளாகிய உரம், கிருமிநாசினி மற்றும் விதைநெல்ஆகியனயாழ். குடாநாட்டிற்கு தேவையான அளவு எடுத்து வரப் படாமைக்கான காரணம் என விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் இணைந்து தெரிவித்துள்ளன.

கடந்த புதன்கிழமை யாழ் செயலகத்தில் நடைபெற்ற உணவு உற்பத்திக் குழுக்கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்படி விடயம் சம்பந்தமாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் உதவி நாடப்பட்டது.

இதற்கு இணையம் தம்மாலான உதவியை காலப்போகில் செய்வதாக உறுதியளித்துள்ளது. (பா)

## கோவில் கிணற்றிலிருந்து இளைஞர் சடலம் மீட்பு

[வடமராட்சி]

புற்றளை பிள்ளையார் ஆலய வளவில் உள்ள கிணற்றில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

ஆத்தியடியைச் சேர்ந்த கனகசபை விவேகானந்தம் [வயது 30] என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்த இந்த ஆலயத்திற்கு சென்றிருந்த மேற்படி இளைஞனுக்கு வலி ஏற்பட்டதால் கிணற்றில் தவறி விழுந்ததாக தெரியவருகிறது.

[யோ]

விக்கும் என எண்ணவாய்ப்பில்லை. கடந்த காலத்தில் எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு பாராளுமன்ற ஆட்சிமுறை அமுல்படுத்தப்பட வேண்டும் எனக் கோரி வந்தன. மாகாண சபைத் தேர்தலிலும் இவ்விவகாரம் முக்கிய பிரசாரமாக இருந்தது. இந்நிலையில் இவ்விவகாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு தடைகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், இதைத் தொடர்ந்து கருத்துக் கணிப்பு இடம் பெறினும் அது வெற்றி பெறும் என்றே துணிந்து கூறலாம்.

ஆனால், இவ் அரசியல் யாப்பு மாற்றத்தால், இனப்பிரச்சினை குறித்து முன்னேற்றகரமான நிலைமை ஏதாகிலும் ஏற்படுவதற்கான வாய்ப்பு உண்டா என்றால் இல்லை என்றே கூறவேண்டும். மாறாக சிலவேளை இனப்பிரச்சினை மேலும் சிக்கல் அடைவதற்கான வாய்ப்புக்களே அதிகமானதாகவுள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை சிறுபான்மையினருக்கு ஓரளவு சாதகமானநிலையை கொண்டுள்ளதாக சிலர் கருதுகினர் ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தீர்மானங்கள் எதையும் தன்னிச்சையாக எடுக்கும் அதிகாரம் பெற்றவராகையால் பிரச்சினை எதையும் தீர்க்கக் கூடிய தீர்மானங்கள் எதையும் எடுக்கும் ஆற்றல் அவருக்குண்டு. ஆகையினால், இனப்பிரச்சினையை தீர்க்க கூடிய முன்னேற்றகரமான தீர்மானம் எதையும் ஜனாதிபதி எடுக்கலாம் எனக் கருதப்பட்டமையினாலேயே அவ்வாறான கருத்து உருவானது.

ஆனால், சிறிலங்காவில் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக ஆட்சி செய்துள்ள ஜனாதிபதிகளான ஜே ஆர். ஜெயவர்த்தனாவும், பிரேமதாசாவும் உயர்வான நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருந்தனர். தமது ஆட்சிக் காலத்தில் அவர்கள் இவ் அதிகாரங்களையும் உயர்ந்தளவில் பயன்படுத்தியுமுள்ளனர் ஆனால். அவர்கள் எவரும் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கக் கூடிய எந்தவித முற்போக்கான திட்டங்களையும் கொண்டிருக்கவில்லை. மாறாக ஜே ஆர். ஜெயவர்த்தனா நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்திய இராணுவததை வரவழைத்து போரில் ஈடுபடுத்தினார்.

அதாவது ஜனாதிபதி ஆட்சிமுறை சிலர் கருதியது போல் தமிழர் தேசிய இனப்பிரச்சினையில் எந்தவித முன்னேற்றகரமான நடவடிக்கைக்கும் உதவவில்லை. ஜனாதிபதி பிரேமதாசா இராணுவத்தின் தேவையான வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும், அரசியலில் இராணுவத்தின் செல்வாக்கு ஓங்கவுமே வழி வகுத்ததார்.

இந்நிலையில், தமிழ் மக்களைப் பொறுத்து அரசியல் அமைப்பு முறை நிறைவேற்று அதிகாரம் கொண்டதாக இருந்தால் என்ன? 'வெஸ்மினிஸ்டர்' மாதிரியிலான பாராளுமன்ற அமைப்பாக இருந்தால் என்ன? இரண்டு அரசியல் அமைப்பு முறையிலும் தமிழர் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லை. இரண்டு அமைப்பிலும் பௌத்த பேரினவாதிகளான ஆட்சியாளர்கள் மாறவுமில்லை. ஆதலினால் அரசியல்யாப்பு மாறுவதால் தமிழர் கவலைப்பட ஏதுமில்லை.

வழங்கப்படுகின்றது.

தொடர்ந்து வழங்கப்பட்டு வரும் இப் பயிற்சி நெறிகளின் அடுத்த அமர்வு எதிர்வரும் 12-07-93 — 23-07-93 வரையான காலத்தில் நடாத் கழக வேலைத் திட்டங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதில் முன்னுரிமை அளிக்கப்படுமெனவும, பொருண்மிய மேம்பாட்டு கழக செய்திக் குறிப் பொன்று தெரிவிக்கின்றது.

## கட்சி மாறலை ஆதரிக்கும் திருத்தத்திற்கு பிரேரணை

[கொழும்பு]

பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறுவதைத் தடுக்கும் வகையில் இருக்கும் அரசியலமைப்பு ஏற்பாடுகளுக்கு திருத்தம் கொண்டு வரும் பிரேரணைக்கு களுத்துறை மாவட்ட சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்னான்டோ முன் அறிவித்தல் கொடுத்துள்ளார்.

இப் பிரேரணை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு இருப்பதை தொடர்ந்து இந்த மாதத்தினுள் இது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படலாம் என்று நம்பப்படுகிறது.

இப் பிரேரணை தொடர்பாக கருத்து வெளியிட்ட டாக்டர் நெவில் பெர்னாண்டோ மேலும் கூறுகையில்; பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். கட்சித் தலைவரின் அநாவசிய கோரிக்கைகளுக்கு தலை ஆட்டும் பொம்மையாக மட்டும் இருக்கக்கூடாது எனவும் தெரிவித்தார்.

## சுற்றுலா பயணியிடம் திருட்டு ஹோட்டல் ஊழியர் கைது

(கொழும்பு)

ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் பணிபுரியும் பிரபல சிங்களப் பாடகர் ஒருவர் ஆயிரம் அமெரிக்க டாலர்களைத் திருடினார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி, நெவில் அந்தனி தலைமையிலான கோஷ்டியினால் கைது செய்யப்பட்ட இவரது வீட்டிலிருந்து திருட்டுப் போன கரன்சி நோட்டுக்களும் மீட்கப்பட்டுள்ளன.

ஐ. தே. க. வில் சேர்க்கும் நடவடிக்கை

## ஹேமாவிற்கு ஆதரவாக அமைச்சர்கள் முயற்சி

திருமதி ஹேமா பிரேமதாசாவை மீண்டும் அரசியலுக்குள் கொண்டுவரும் முயற்சியில் ஐ.தே.கவினுள் உள்ள சில அமைச்சர்கள் முயன்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆறு அமைச்சர்கள், பத்து இராஜாங்க அமைச்சர்கள், பதினொரு ஐ. தே. க எம். பிகள் 26 மாகாணசபை உறுப்பினர்கள் ஹேமாவை மீண்டும் அரசியலுக்குள் கொண்டுவரும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

### பரிசளிப்பு விழா

[தொல்புரம்]

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும், இன்று பி.ப. 1 00 மணியளவில் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் அதிபர் திரு கா சந்திரபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (41)

### ருகுணு

டாவது உத்தரவு கொழும்பிலிருந்து வந் தையடுத்து தாம் கப்பலை காங்கேசனுக்கு செலுத்தியதாகவும் கப்பலின் கப்டன் முன்னதாக கூறியிருந்தார் இக் கூற்று குறித்தே விசாரிக்கப்படும் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## வருடாந்த நவநாள்

(குருநகர்)

உத்தரிய மாதா ஆலய வருடாந்த நவநாள் கொண்டாட்டம் இன்று மாலை 5மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தினமும் செபமாலை, மறையுரை, திருப்பலி ஆகியன நடைபெறும்.

15ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனையும், சுற்றுப்பிரகாரம் என்பனவும் இடம்பெறும்.

16ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலியை அடுத்து திருச்சொருப பவனி நடைபெறும். (21)

பதினைந்து ஆசிரியர்களின் இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. (17)

### இரவுநேர மீட்டல் வகுப்புகள்

(தொல்புரம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தொல்புரம் பாபு கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் பாடசாலை மாணவ, மாணவியற்கான இரவு நேர மீட்டல் வகுப்புகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி மீட்டல் வகுப்புக்கள் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் பெற்றோமாக்ஸ் லாம்பு வெளிச்ச வசதியுடன் சுமார் நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது கல்வியை இரவு வேளை சுயமாகக் கற்று பயனடைந்து வருகின்றனர். (41)

### கருத்தரங்கு

ஓவிய சிற்பத்துறையில் இன்றைய எதிர்பார்ப்புகள் என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று பிற்பகல் மூன்று மணியளவில் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் இடம் பெறவுள்ளது. நேற்று ஆரம்பமான ஓவிய சிற்பக் கண்காட்சியின் ஒரு அங்கமாக இடம் பெறும் இக்கருத்து பரிவர்த்தனைக் களத்திற்குதிரு. ஏ. ரி. பொன்னுத்துரை தலைமை தாங்க, திரு. ச. துரைவீரசிங்கம், திரு. க. இராசரத்தினம், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்

### தளபதி

75, 000 டொலர் தேவைப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

'எம். வி. அகத்' என்ற இந்தக் கப்பல் சர்வதேச கடற்பரப்பில் இந்திய கடற்படையால் கைப்பற்றப்பட்டு பலவந்தமாக இந்தியாவிற்கு இழுத்துச் செல்லப்பட்டது. இச்சம்பவத்தின்போது புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கிட்டு உட்பட ஒன்பது பேர் வீரச் ாவு அடைந்தனர் என்பது தெரிந்ததே.

இது குறித்து நீதி கோர இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் நீதிமன்றங்களில் புலிகள் வழக்கு தாக்கல் செய்ய முடிவு செய்தனர் எனவும்,

சென்னை உயர்நீதிமன்றில் இந்திய பாதுகாப்பு அமைச்சு தாக்கல் செய்த சத்தியக் கடதசியில் புலிகளின் கப்பல் சர்வதேச கடலில் பிடிக்கப்பட்டதை இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர் எனவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரம், ... விதைநெல் ஆகியனயாழ். குடாநாட்டிற்கு தேவையான அளவு எடுத்து வரப்படாமைக்கான காரணம் என விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களம் இணைந்து தெரிவித்துள்ளன.

கடந்த புதன்கிழமை யாழ் மாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் உதவி நாடப்பட்டது.

இதற்கு இணையம் தம்மாலான உதவியை காலப்போக்கில் செய்வதாக உறுதியளித்துள்ளது. (பா)

## கோவில் கிணற்றிலிருந்து இளைஞர் சடலம் மீட்பு

[வடமராட்சி]

புற்றளை பிள்ளையார் ஆலய வளவில் உள்ள கிணற்றில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

ஆத்தியடியைச் சேர்ந்த கனகசபை விவேகானந்தம் [வயது 30] என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்த இந்த ஆலயத்திற்கு சென்றிருந்த மேற்படி இளைஞனுக்கு வலி ஏற்பட்டதால் கிணற்றில் தவறி விழுந்ததாக தெரியவருகிறது. [யோ]

## ஐ. நா. அதிகாரிகள் மன்னார் விஜயம்

அகதிகளுக்கான ஐ நா. தூதரக பிரதிநிதிகள் நேற்று மன்னாருக்கு விஜயம் செய்தனர். மேற்படி ஐ நா. தூதரக கொழும்பு வதிவிடப் பிரதிநிதி திரு. காசிம்உட்கான், பாதுகாப்பு அதிகாரி திரு. பீற்றர் நிக்கலஸ் ஆகியோரே மன்னாருக்கு விஜயம் செய்துள்ளனர்.

இவர்கள் இருவரும் தமது மேற்பார்வையில் இயங்கும் அகதிமுகாம்களைப் பார்வையிடவே மன்னார் வந்துள்ளனர். நேற்றைய தினம் நண்பகல் இவர்கள் பேசாலை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அகதிமுகாமைப் பார்வையிட்டனர். நாளைவரை இங்கு தங்கியிருக்கும் இவர்கள், திங்கள் காலை மடு அகதிமுகாமையும் தச்சனா மருதமடுவில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாமையும் பார்வையிடுவர் எனவும், அதன்பின் அன்றைய தினமே கொழும்பு திரும்புவர் என அகதிகளுக்கான ஐ. நா. தூதரக யாழ். வதிவிடப்பிரதிநிதி திரு. அசோக்குமார் தெரிவித்தார்.

இப்பேசாலை முகாமில் 17 ஆயிரம் பேரும் , மடு முகாமில் 30 ஆயிரம் பேரும், தச்சனா மருதமடுவில் 2 ஆயிரம் பேரும் அகதிகளாக தங்கியுள்ளமை தெரிந்ததே.

### சம்பள

நடாத்தப்படும் எனவும் இறுதியில் பாரிய வேலை நிறுத்தப் போராட்டம் நடாத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்

இதற்கென சகல தொழிற் சங்கங்களினதும் குறிப்பாக வங்கி ஊழியர் சங்கத்தின் ஒத்துழைப்பு பெறப்படும் என தெரிவித்தார்.

சம்பள உயர்வை காரணம் காட்டி அத்தியாவசிய பொருள்களின் விலையை அதிகரித்த அரசாங்கம் பின்னர் சம்பள உயர்வை பின் போட்டது எவ்விதத்திலும் ஏற்கப்பட முடியாதது என அவர் மேலும் தெரிவித்தார்

### வாதுவ

அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்களுடன் பருத்தித்துறை நோக்கி 'குமாரி' கப்பல் நேற்றுமாலை கொழும்பு துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுள்ளது

இக்கப்பல் பருத்தித்துறையை எதிர்வரும் திங்கட்கிழமை வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் இக்கப்பலில் கொழும்பில் உத்தியோகபூர்வ அலுவல்களை முடித்துக்கொண்டு யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகரும் புறப்பட்டு வருகின்றார். (நி) (பா) (யோ)

### நினைவு விழா

பாஷையூர் நாட்டுக்கூத்து வளர்ச்சிக் கழகம் நடாத்தும் ஏழிலிசை மன்னன் அண்ணாவியார் சி. குணசிங்கம் அவர்களின் பத்தாம் ஆண்டு நினைவு விழா பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக அரங்கில் இன்று பி.ப. 5மணிக்கு திரு. மு சிங்கராயர் தலைமையில் நடைபெறவுள்ளது.

### காமினிக்கு

தே. முன்னணியும் இணைவதால் மேல் மாகாண சபையின் ஆட்சி அதிகாரத்திலுள்ள பொதுசன ஐக்கிய முன்னணி எந்த விதத்திலும் பாதிக்கப்படமாட்டாது என ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

சன்மார்க்கசபை – குரும்பசிட்டி

சன்மார்க்க நுண்கலை மன்றம்
ஓவியக் கண்காட்சியும் சிறுவர் சித்திரப்
போட்டிப் பரிசளிப்பும்

## பரிசளிப்பு விழா

இடம் :- யாழ். இராமநாதன் நுண்கலைப்பீடம்
மருதனார் மடம்

காலம் :- 11-07-93 ஞாயிறு பிற்பகல் 3 மணி

தலைவர் :- கலாகேசரி ஆ. தம்பித்துரை

சிறப்புரை :- கலாநிதி சி. க. சிற்றம்பலம் (தலைவர் - வரலாற்றுத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

பரிசளிப்புப் பேருரை:
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(கலைப்பீடாதிபதி - யாழ் பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(5301) - பணிப்பாளர்.

## உளவளத்துணை சான்றிதழ் பயிற்சி

எமது ஸ்தாபனம் நடத்திவரும் அடுத்த பயிற்சி வகுப்பு ஆகஸ்ட்/செப்டம்பர் மாதங்களில் ஆரம்பிக்கப் பட இருக்கின்றது.

இம்முறை வகுப்புக்கள் தமிழில் நடைபெறும். ஆனால் ஆங்கிலத்தில் தேர்ச்சி அவசியம். இவ்வகுப்புக்கள் சனி, ஞாயிறு நாட்களில் நடைபெறும் ஆறுமாத பயிற்சி முடித்துப் பின் ஒருவருட சேவைக்காலப் பயிற்சி (Internship) முடிந்த பின்பு தகுதிவாய்ந்தவர்கள் எனத் தெரிவானவர்கட்கு சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சியை மேற்கொள்ள விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு 15. 07. 93ற்கு முன் விண்ணப்பிக்கவும். (விண்ணப்பப் பத்திரத்தை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.)

பயிற்சியாளர் தெரிவு செய்யும் பொழுது யாழ் பல்கலைக்கழக புறநிலை படிப்புக்கிளை அலகினால் நடத்த விருக்கும் உளவளத்துணை வகுப்புக்களில் பங்குபற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பணிப்பாளர்,
"சாந்தியகம்"
15, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[5324]

## பதவி வெற்றிடங்கள்

யாழ். மாவட்டத்தில், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள், தகைமை உடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன:

1) முகாமையாளர்கள்.
2) கணக்குப் பதிவாளர்கள்.
3) உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
4) காசாளர்கள்.
5) களஞ்சியப் பொறுப்பாளர்கள்.
6) சிட்டை எழுதுநர்கள்.
7) விற்பனையாளர்கள்.

### தகைமைகள்

## திகதி மாற்றம்

அருணோதயா சனசமூக நிலைய பாலர் பாடசாலை வளர்ச்சிக்காக அதிர்ஷ்டலாபச் சீட்டு அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்ச்சி 11 07. 93-ந் திகதிக்கு மாற்றப்பட்டிருந்தது. இத் திகதியில் இந் நிகழ்ச்சியை பல காரணங்களால் வைக்க முடியவில்லை. ஆகவே இந் நிகழ்ச்சியான சீட்டிழுப்பு 25. 07. 93-ந் திகதி நடைபெறும் என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம். சீட்டிழுப்பு பெறுபேறுகள் 27. 07. 93-ந் திகதி பிரசுரிக்கப்படும் என்பதனையும் அறியத்தருகிறோம்.

நிர்வாகிகள்,
அருணோதயா ச.ச. நிலையம்.

[5322]

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
3. ௮. 72



வீரச்சாவு:
10. 7. 90

### வீரவேங்கை சீனிவாசன்

(செல்வராசா உமையாளன் [ஈசன்])

(மயிலிட்டியில் இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவு அடைந்தார்)

வீட்டிற்கு ஓர் மகனாய்
வாழ்ந்திட்டால் போதாதே
நாட்டிற்கும் நலம் தேடி
வைத்திடவே சென்றவனே
ஈழம் வாழ்வதற்காய்
இன்னுயிர் ஈந்தவனே
மூடி முழிக்கு முன்னே
மூன்றாண்டு காலம்
ஓடி மறைந்தது ஐயா
இப் பிறப்பில் உன்
இனிய முகம் காண்பது எங்கே
நூறாண்டு சென்றாலும்
மாறாது உன் நினைவு.

ஐயனார் கோவிலடி,
மல்லாகம். – குடும்பத்தினர்.

[5325]

## இரண்டாவது ஆண்டு திதி நினைவஞ்சலி



உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 09-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10249

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 36-1191 | 40-2780 | 28-1928 | 24-470. | 26-3177 |
| 24-8429 | 40-6979 | 26-3390 | 41-9396 | 24 0336 |
| 27-6821 | 24-5967 | 26-6933 | 26-6796 | 24-3262 |
| 26 6461 | 24-6480 | 26-5782 | 24-5241 | 27-7822 |
| 26-3068 | 24-7961 | 42-3815 | 27-9105 | 24 0415 |
| 22-6691 | 27-5187 | 24-4908 | 26-7307 | 24-6336 |

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
26-0048, 26-3221, 24-9337, 27-6704, 26-0423

களவத்துறை விளையாட்டுக் கழகம்
நடாத்தும்

## விளையாட்டுப் போட்டி

அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக் கழகம் நடாத்தும் 7பேர் கொண்ட கிரிக்கற் சுற்றுப் போட்டியும். பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது. பங்குபற்ற விரும்பும் கழகம் அல்லது குழுக்கள் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 25 7-93

தொடர்பு : தலைவர், செயலாளர்
களவத்துறை விளையாட்டுக் கழகம்,
அராலி தெற்கு.

(4094)

## முன்னுரிமை பற்றிய முக்கிய அறிவித்தல்

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த காலம் சென்ற திரு. சு. பெ. மு. கனகசபாபதிக்குச் சொந்தமாகவிருந்து தற்போது எனக்குச் சொந்தமாக உள்ளதும், யாழ் நகர், கஸ்தூரியார் வீதியில் 89 ஆம் இலக்கத்தையுடைய கடைக் கட்டிடத்திற்கு, யாழ் நகர் கொட்டடியில் வசித்தவரும், தற்போது லண்டனில் பல வருடங்களுக்கு முன்னர் குடியேறி அங்கு வசித்து வருபவருமாகிய திரு. மு. க. முத்துலிங்கம் அவர்களோ அல்லது அவரால் சட்டபூர்வமாக (Power of Attorney) நியமிக்கப்பட்டுள்ளவர் யாராவது உரிமைகோருமிடத்து இத்திகதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் தயவுசெய்து என்னுடன் கீழ்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

க. குமரகுரு
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

(4093)

## 41-ம் நாள் நினைவலைகள்



## மரண அறிவித்தல்



பிரான்சிஸ்
மிக்கேல்பிள்ளை
[தூயமணி]

குருநகரைச் சேர்ந்த பிரபல கவிஞரும், நாட்டுக் கூத்து அண்ணாவியாருமாகிய பிரான்சிஸ் மிக்கேல்பிள்ளை (தூயமணி) 9-7-93 வெள்ளிக்கிழமை காலமானார். இவர் திருமதி யோகமணியின் அன்புக் கணவரும், யேசுதாஸன் (உரிமையாளர்: செல்வா ஹாட்வெயர்ஸ் சின்னக்கடை) Dr. தூயமணி (யாழ். போதனா வைத்தியசாலை முன்னாள் பல் வைத்திய நிபுணர்) முத்துக்குமார் (மின்சார தொழில்நுட்பவியலாளர்), காலஞ்சென்ற புலேந்திரன், திருமதி வசந்தமாலை (பிரான்ஸ்), திருமதி முத்துராணி, காலஞ்சென்றவர்களான தயாளன், திருமதி சோதிமலர் ஆகியோரின் அருமைத் தந்தையும், தஸதாம்பாள், நிரஞ்சனி, மஞ்சு, யேசுதாஸன் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (ஆசிரியர் யாழ். மத்தியகல்லூரி) ருபினா (நோர்வே) ஆகியோரின் அருமை மாமனாரும், செல்வநாயகம், நவஜோதி (சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்), மேரி சித்திரா (மாணவி திருக்குடும்ப கன்னியர் மடம்) இளங்கோ சிறில், ஆஞ்சாரா (திருக்குடும்ப கன்னியர் ஆங்கில பாடசாலை). யோன் மார்ஷல் (சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்), சமந்தா தாரணி, ஜெசிக்கா பாணினி, பிரிதிவிராஜன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 11-7-93 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல. 2, ஓடக்கரை வீதியிலுள்ள இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்

# பதவி வெற்றிடங்கள்

யாழ். மாவட்டத்தில், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள், தகைமை உடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன:

1) முகாமையாளர்கள்.
2) கணக்குப் பதிவாளர்கள்.
3) உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
4) காசாளர்கள்.
5) களஞ்சியப் பொறுப்பாளர்கள்.
6) சிட்டை எழுதுநர்கள்.
7) விற்பனையாளர்கள்.

## தகைமைகள்

**1) முகாமையாளர்கள்**

க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியும், 2 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

4 வருட காலம் வர்த்தக முகாமையாளராகக் கடமை புரிந்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**2) கணக்குப் பதிவாளர்கள்**

க. பொ. த. (உ/த) பரீட்சையில் கணக்கியலிலும், வர்த்தகமும், நிதியும் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கணக்கியல் தராதரப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கணக்குப் பதிவாளராக ஆகக் குறைந்தது 2 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**3) உள்ளக கணக்காய்வாளர்கள்**

க. பொ. த. (உ/த) பரீட்சையில் கணக்கியல், வர்த்தகமும் நிதியும் ஆகிய பாடங்களில் சித்தியும் 2 வருடத்திற்குக் குறையாத கணக்காய்வு அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஏதாவது ஒரு கற்கைநெறியில் கணக்காய்வில் சித்தியுடன் 1 வருட கணக்காய்வு அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கணக்காய்வுத் துறையில் 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**4), 5), 6), 7) ஆகிய பதவிகளுக்கு**

ஆகக்குறைந்தது க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியும், குறிப்பிடப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 1 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

குறிப்பிடப்பட்ட துறையில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அனுபவத்தையும், வேலைத்திறனையும் அடிப்படையாகக் கொண்டு சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு நாள் 15-07-1993.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி -

ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (இ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


ஈழம் வாழ்வதற்காய்
இன்னுயிர் ஈந்தவனே
மூடி முழிக்கு முன்னே
மூன்றாண்டு காலம்
ஓடி மறைந்தது ஐயா
இப் பிறப்பில் உன்
இனிய முகம் காண்பது எங்கே
நூறாண்டு சென்றாலும்
மாறாது உன் நினைவு.

ஐயனார் கோவிலடி,
மல்லாகம்.

– குடும்பத்தினர்.

[5325]

## இரண்டாவது ஆண்டு திதி நினைவஞ்சலி



### நடராஜா வரதராஜா
(வரதன்)

தாயின் மடியில்: 1959-12-22

தாயக மண்ணில்: 1991-07-03

**திதி: 1993-07-10 சனிக்கிழமை**

ஆண்டுகள் இரண்டு ஓடிப் போனதுவோ
எங்கள் செல்வ வரதா
உன் திறமைகளை எங்கெல்லாம் விரித்து வைத்தாய்
இன்று உலகெல்லாம் உன் பெயர் ஆனதே
பாசம் என்ற சொல்லுக்கு இலக்கணம் நீயானாய்
பண்பு என்ற சொல்லுக்கு உறைவிடம் நீயானாய்
எதிரியை உன் காலில் விழ வைத்தாய்
இன்று அவன் மண்ணில் ஏன் மடிந்தாய்
எங்குதான் உன் உடல் மறைந்தாலும்
உன் பால்வடியும் முகமும் களங்கமில்லா சிரிப்பும்
ஆண்டுகள் இரண்டென்ன இருநூறு ஆனாலும்
நம் இதயங்களை விட்டகலாது.

உன் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

சாமியன் அரசடி,
கரவெட்டி. (இ)

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

(4093)

க. குமரகுரு
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

## 41-ம் நாள் நினைவலைகள்



### லெப். வினோ
**(விக்கோடியன்)**

[தனபால் சுரேஷ்]
[பண்டிக்கெய்தகுளம், ஓமந்தை]

வீரன் வினோ எல்லைப் போரில்
விழுந்த சேதியோ? — இவன்
ஈர் நெஞ்சம் இரத்தம் கொட்டி
அழிதல் நீதியோ?

ஊரில் எதிரி முகாம்கள் தேடி
அழித்து வந்தாயோ? — வல்ல
போரை வெல்ல நீயும் வினோ
உயிரை ஈந்தாயோ?

காற்றும் உந்தன் வீரம் கண்டு
கீதம் பாடுதே! — உன்னைப்
பெற்ற தாயும நாமும் இன்றுன்
புகழைச் சூடுறோம்!

உறவினர்
நீயூ லலிதா ஸ்தாபனத்தார்

(5328)

## 2-ம் ஆண்டு நினைவில்....

மண்ணில்: 04-04-1982

விண்ணில்: 10-07-1991

அமரர் **வ. யோ. தம்பிஐயா**

(ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை ஒய்வு பெற்ற ஊழியர்)

"ஆண்டுகள் கோடி ஓடியே போகினும்
அன்புடை நினைவிலே அனுதினம் நனைவோம்"

கரவெட்டி.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(5307)

மஞ்சு, யேசுதாஸன் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (ஆசிரியர் யாழ். மத்தியகல்லூரி) ருபினா (நோர்வே) ஆகியோரின் அருமை மாமனாரும், செல்வநாயகம், நவஜோதி (சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்), மேரி சித்திரா (மாணவி திருக்குடும்ப கன்னியர் மடம்) இளங்கோ சிறில், ஆஞ்சாரா (திருக்குடும்ப கன்னியர் ஆங்கில பாடசாலை). யோன் மார்ஷல் (சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்), சமந்தா தாரணி, ஜெசிக்கா பாணினி, பிரிதிவிராஜன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 11-7-93 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இல. 2, ஓடக்கரை வீதியிலுள்ள இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைககு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யேசுக்குட்டி (மகன்)

(சி/6988)

### விடுமுறை

குறிப்பாக பெண் ஊழியர்கள் எவரும் பி. ப. 5 மணிக்கு பின் காரியாலயங்களில் வேலை செய்ய அனுமதிக்கக் கூடாது.

காரியாலயங்களிற் கடமையாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர் காரியாலயத்தின் ஒழுங்குகளை கவனிககவேண்டும என வடகிழக்கு மாகாண அமைச்சின் பிரதம செயலாளர் திரு. எஸ், கணேசநாதன் சகல வடகிழக்கு மாகாணங்களில் இயங்கிவரும் திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் யாழ். கல்வித் திணைக்களம் சகல கோட்டங்களுககும் பொறுப்பான பிரதிக கல்விப் பணிப்பாளருக்கு இந்நடை முறையைப் பின்பற்றுமாறு பணித்துள்ளது.

### ஜனாதிபதி

சூழ்நிலை மட்டக்களப்பு, திருக்கோணமலை மாவட்டங்களில இன்னமும் உருவாகவில்லை எனவும் இங்கு தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த குறைந்தது ஐந்து மாதங்களாவது தேவை எனவும் தெரிவித்தனர்.

இச் சூழ்நிலையின் நிலையிலேயே தெரிவுககுழு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை நடததும் சாத்தியங்கள் பற்றி தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரமுடியாமல தள்ளிவைதததது.